මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: CGO/ASM/Policy/Cir/ (VOL III)
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2024.12.18

**ஆதன முகாமைத்துவ சுற்றுநிருபம் இல. 05/2024**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்
அரச வங்கிகள் மற்றும் அரசுடமை நிறுவனங்களின் தலைவர்கள், அனைவருக்கும்

**அரசாங்கத்தின் நிதியல்லாத ஆதனங்கள் முகாமைத்துவம்**
**அரச நிறுவனங்களின் மீது பெரும் சுமையை ஏற்படுத்துகின்ற சொகுசு வாகனங்களை விற்பனைசெய்தல்**

பொதுச் சொத்துக்களின் தவறான மைமாற்றல் மற்றும் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும் பொது மக்களின் பணத்தின் உற்பத்திறன்மிக்க பயன்பாட்டை உறுதி செய்வதற்கும் அரசாங்கத்தின் அனைத்து வாகனங்களையும் முறையாகப் பயன்படுத்துதல், பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பன அனைத்து பொது நிறுவனங்களின் (அரசாங்க நிறுவனங்கள், பொது தொழில்முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்) தலைவர்களது கடமையாகும்.

02 24/2096/801/004 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கேற்ப, 2024 டிசம்பர் 02 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, அனைத்து பொது நிறுவனங்களின் தலைவர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி, அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்களைத் தங்கள் அதிகாரத்தின் கீழ் விற்பனைசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்:

i. (அ.) அந்தந்த பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர், பின்வரும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை, நிறுவனத்தின் வாகனத் தேவையை மதிப்பிட்டு, பயன்படுத்துவதற்கு சிக்கனமற்ற /நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு தேவையற்ற வாகனங்களை அரசாங்கத்தின் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி விற்பனைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அதுபற்றிய தகவல்களை நிதியல்லாத ஆதன முகாமைத்துவ முறைமையில் (NFAMS) 2025 மார்ச் 01 ஆந் திகதிக்கு முன்னர் பதிவு செய்தல் வேண்டும்.

(ஆ) கீழே (ii) இல் வகைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் வாகனம் அந்தந்த நிறுவனத்தின் பயன்பாட்டிற்குத் தேவைப்பட்டால், அந்தந்த பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ***பின்னிணைப்பு I***

இன்படி, அத்தகைய வாகனங்களின் விவரங்களுடன், தேவையை நியாயப்படுத்தும் கோரிக்கையை அனுப்பிவைத்தல் வேண்டும். இது தொடர்பாக திறைசேரிச் செயலாளரிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு, கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு 2024 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். அத்தகைய தகவல்கள் அந்தந்த பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலரினால் முறையாக சான்றுபடுத்தப்படல் வேண்டும் அல்லது ஏதேனும் விதிவிலக்கான சந்தர்ப்பத்தில் அந்தந்த பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் சார்பாக நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பான அந்தந்த உயர் அதிகாரியால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

ii சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை அ இல் வெளியிடப்பட்ட இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பு (H S Heading) 87.03 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட, இயந்திர கொள்ளளவு 1800 சிசி இனை விஞ்சிய பெற்ரோல் வாகனங்கள் / இயந்திர கொள்ளளவு 2300 சிசி இனை விஞ்சிய டீசல் வாகனங்கள் அனைத்தும். (டபள் கெப்ஸ், சிங்ள் கெப்ஸ், வேன்கள், பேருந்துகள், லொரிகள் மற்றும் டிரக்குகள் என்பன இந்த இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்படவில்லை என்பதை கருத்தில் கொள்ளவும்).

iii. மேலே குறிப்பிட்ட விற்பனை நடைமுறையின் கீழ் எந்தவொரு அரச நிறுவனமும் வாகனங்களை கொள்வனவு செய்யமுடியாது.

03. மேலே உள்ள 02 (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வாகனங்களின் தொடர்புடைய விவரங்களின் பிரதியை, ஒவ்வொரு நிறுவனத்திலும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பு II இன் படி, 2024 டிசம்பர் 31 இற்கு முன்னர், தகவல்களுக்காக, கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய தகவல்கள் மேலே 02 (i) (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி முறையாக சான்றுபடுத்தப்படல் வேண்டும். அத்தகைய தகவல்கள் 011-2151417 என்ற இலக்கத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், மென் பிரதியை (MS Excel) cgo@mo.treasury.gov.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்தல் வேண்டும். மேலே (ii) இல் விஷேடமாகக் குறிப்பிட்டுள்ள வாகனங்கள் ஏதேனும் ஒரு பொது நிறுவனத்திடம் இல்லையென்றால், அதுபற்றி "Nil" அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. இயங்கு நிலையிலல்லாத வாகனங்களை விற்பனைசெய்தல் மற்றும் வாகனங்களை முறையாகப் பயன்படுத்துதல் :

i. மேலும், ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 04/2022 இல் அறிவுறுத்தியவாறு, உரிய பராமரிப்பு மற்றும் கவனக்குறைவான பாவனையை தவிர்த்து வாகனங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதை மேலும் வலியுறுத்தப்படுகிறது. அத்துடன் தேவைக்கேற்ப வாகனங்களை உரிய நேரத்தில் விற்பனைசெய்வது, அந்தந்த சுற்றறிக்கையின்படி, பொதுச் சொத்துக்கள் பாழாவதையும், அரசுக்கு வருமான இழப்பு ஏற்படுவதையும் தடுத்தல் அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர்களின் கடமைப் பணியாகும்.

ii. ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2020 மற்றும் இல. 04/2022 மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி இயங்கு நிலையிலல்லாத வாகனங்களை அகற்றும் செயன்முறையை இன்னும் நிறைவுசெய்யாத அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர்கள், அத்தகைய வாகனங்களை அகற்றும் செயன்முறையை நிறைவுசெய்யத் தேவையான நடவடிக்கைகளை எட்டுத்தல் வேண்டும், என்பதுடன் NFAMS முறைமையில் தொடர்புடைய தகவல்களை உடனடியாக பதிவு செய்தல் வேண்டும்.

05. வாகன விற்பனை மூலம் கிடைத்த வருமானத்தைப் பதிவுசெய்தல்:

வாகன விற்பனை மூலம் கிடைத்த வருமானத்தை ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2020 இன் பிரிவு 02 (அ) இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி பதிவு செய்யப்படல் வேண்டும்.

06. வாகன விற்பனை மற்றும் இரத்துச்செய்தல் / பதிவு செய்யப்பட்ட உரிமையை மாற்றுதல் :

i. ஒரு வாகனம் கழிவுப் பொருட்களாக அப்புறப்படுத்தப்பட வேண்டுமானால், வாகனத்தை அகற்றுவதற்கு முன்னர், பதிவு செய்யப்பட்ட உரிமையை இரத்துச்செய்வது அந்தந்த பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர்களது பொறுப்பாகும்.

ii. ஒரு வாகனம் கழிவுப் பொருட்களாக இல்லாமல் விற்பனை செய்யப்பட்டால், அந்த வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையை விற்பனை செய்த நாளிலிருந்து ஆறு (06) மாதங்களுக்குள் மாற்றுவது அந்தந்த பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர்களது பொறுப்பாகும்.

07. NFAMS முறைமையில் உள்நுழைந்து சுற்றறிக்கைகளைப் பார்ப்பதற்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://systems.treasury.gov.lk இனைப் பயன்படுத்தி இணையதளத்தில் உள்நுழையவும். மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு: nfams@mo.treasury.gov.lk மூலம் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கவும். தொலைபேசி இல.: 011-2484583, 011-2151425.

ஒப்பம்/- கே.எம். மஹிந்த சிறிவர்தன
திறைசேரியின் செயலாளர்

SCAN HERE TO LOGIN **NFAMS**

பிரதிகள்:
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. ஆணையாளர் நாயகம்,
   மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்
5. கணக்காய்வாளர் நாயகம்

# Annexure- I

## Vehicles required for the use of the Institution

Petrol vehicles exceeding Engine Capacity 1800 CC / Diesel vehicles exceeding Engine Capacity 2300 CC

which are classified under the H S Heading 87.03 published in the Schedule A of the Customs Ordinance
(Please note that, Double Cabs, Single Cabs, Vans, Buses, Lorries and Trucks etc. are not included to this H S Heading)

*A duly filled and certified copy should be faxed to 011-2151417 and email the soft copy (MS Excel) to cgo@mo.treasury.gov.lk*

**Name of the Institution -**

| No | Vehicle No *(Ex: KA-0001/ 32SRI0001/ 19-0001)* | Purpose (Assigned/ Pool) | If Assigned | | Justification for the requirement of Use |
|---|---|---|---|---|---|
| | | | Name of the Officer | Designation | |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

**Certified Officer : Name -**
**Designation -**
**Contact No -**
**Official Stamp -**

# Annexure- II

## All the Vehicles under the Institution

Petrol vehicles exceeding Engine Capacity 1800 CC / Diesel vehicles exceeding Engine Capacity 2300 CC

which are classified under the H S Heading 87.03 published in the Schedule A of the Customs Ordinance
(Please note that, Double Cabs, Single Cabs, Vans, Buses, Lorries and Trucks etc. are not included to this H S Heading)

*A duly filled and certified copy should be faxed to 011-2151417 and email the soft copy (MS Excel) to cgo@mo.treasury.gov.lk*

**Name of the Institution -**

| No | Vehicle No *(Ex: KA-0001/ 32SRI0001/ 19-0001)* | Make *(Ex:Toyota/ BMW)* | Model *(Ex:Land Cruiser V8/ X5)* | Year of Manufacture | Name of the Owner *(as mentioned in the Certification of Registration)* |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

**Certified Officer : Name -**
**Designation -**
**Contact No -**
**Official Stamp -**

Soft copy of these Annexures is available with this Circular in the website as given in the Section 07 of this Circular.